மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம். மதுரை ஸ்ரீ மீனாட்சி மில் நிர்வாகத்தினர் தொழிலாளர்களுக்கு 1976–77-ஆம் ஆண்டிற்கான போனஸ் வழங்குவதிலிருந்து விலக்கு அளிக்கும்படி கோரி மனு அனுப்பியிருந்தனர்.

(ஆ) அரசு அம்மனுவினைப் பரிசீலித்து போனஸ் வழங்குவதிலிருந்து விலக்கு அளிக்க இயலாது என, மதுரை ஸ்ரீமீனாட்சி மில் நிர்வாகத்திற்கு 1978-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 28-ம் நாளன்று தெரியப்படுத்தியது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே, அந்த ஆண்டிலே அந்த மனு நிராகரிக்கப்பட்டதற்கு அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குப் பிறகு இந்த ஆண்டும் விதிவிலக்கு வேண்டும் என்று மனு செய்திருக்கிறார்கள், அதையும் அரசு நிராகரிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு விதிவிலக்கு கோரி மனு வரவில்லை. இந்த அரசினுடைய கொள்கையே எந்த நிறுவனம் விதிவிலக்கு வேண்டுமென்று கேட்டாலும் கொடுப்பதில்லை என்று முடிவெடுத்திருப்பதாகும். ஆகவே கொடுக்க மாட்டோம், கொடுத்ததில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். லட்சுமிநாராயணன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு தொழிலாளர்கள் மீனாட்சி மில் நிறுவனத்தினரிடமிருந்து கோரிய போனஸ் தொகை எவ்வளவு? அவர்கள் பெற்ற போனஸ் எவ்வளவு என்பதைத் தெரிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இதற்கு தனிக்கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ளாற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண். 250—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடலூர் சிதம்பரம் நெடுஞ்சாலையில் வெள்ளாற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற் குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

1979 மார்ச் 6]

திரு. என். கிட்டப்பா : வெள்ளாற்றின் குறுக்கே கடலூர்—சிதம்பரம் நெடுஞ்சாலையில் ஏற்கனவே கிழக்குக் கடற்கரைச் சாலை அமைவதையொட்டி ஒரு புது பாலம் அங்கே அமைக்க இருப்பதாக முன்னாள் இருந்த அரசு செய்தி வெளியிட்டது. அந்தக் கிழக்குக் கடற்கரைச்சாலை இன்னும் முழுமை அடையாமல் இருக்கிற நிலையில் புதிய ஒரு திட்டத்தின் மூலமாகவாவது கடலூர்—சிதம்பரம் நெடுஞ்சாலையில் வெள்ளாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் செயற்குறிப்பைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கிழக்குக் கடற்கரைச்சாலை மேம்பாட்டுத் திட்டம் பரிசீலனையில் இருந்துதான் வருகிறது. அந்தக் கிழக்கு கடற்கரைச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இந்தப் பால வேலையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் 30 லட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அந்தப் பாலத்தின் தேவையை கூட அரசு உணர்ந்திருக்கிறது. காரணம் பேருந்துகள் மற்ற வாகனங்கள் புவனகிரி வழி செல்லவேண்டியிருப்பதால் ஏழு கிலோ மீட்டர் அதிகமாகச் செல்ல வேண்டியிருக்கிறது என்பதால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்பது அரசின் ஆய்வில் தெரிய வருகிறது. கிழக்குக் கடற்கரைச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தை துரிதப்படுத்தி அல்லது அரசாங்க சாலைத் திட்டத்தின்கீழ் நிதிநிலையை ஆய்ந்து விரைவில் எடுப்பதற்கு பரிசீலனை செய்யப்படும்.

கோமுகி ஆற்றுப்பாலத்தை அகலப்படுத்துதல்.

*வினா எண் 251 திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாகளுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி அருகே சேலம் நெடுஞ்சாலையில் கோமுகி நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலத்தை அகலப் படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) அதன் கரைகளைப் பலப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) இல்லை.

(ஆ) அதன் கரைகள் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருவதால் பலப்படுத்தவேண்டிய அவசியம் எழவில்லை.